### சமூக வலைதளத் தந்திரங்களைப் பயன்படுத்தி வென்றுள்ளனர்!

# எப்போதும் மெத்தனமாக இருக்காமல் அசுர வேகத்தில் பணியாற்ற வேண்டும்!

## திருச்சி செயல்வீரர்கள் கூட்டத்தில் - கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பேச்சு!



திருச்சி, மே 30-

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் மத்திய, வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவருமான கே. என்.நேரு முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகங்களில் ஜூன் 3ம் தேதி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் அன்று கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கி, கலைஞரின் வரலாற்றுச் சாதனைகளை சமூக வலைதளங்களில் வீடியோக்களாக பதிவிட்டு இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது. தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கழக முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். அவர்களை நியமித்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கடந்த தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த திருச்சி மாவட்ட வாக்காள பெருமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு உரையாற்றுகையில்..

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் குறித்தும், கழகத்தின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்தும் விளக்கினார்.

தி.மு.க. இன்றும் தனித்து நின்று களம் காணும் நிலையில் உள்ளது. நம்முடன் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இதர தோழமைக் கட்சிகள், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்ற காரணத்திற்காகத் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர். ஆனால், காங்கிரஸ் போன்ற கட்சிகள் முந்தைய காலங்களில் நம்மை இக்கட்டான நிலைக்குத் தள்ளிச் சென்ற வரலாறும் உண்டு. தற்போதைய தேர்தல் முடிவுகளைப் பார்த்தால், நமக்கும் எதிர்தரப்பிற்கும் உள்ள வாக்கு வித்தியாசம் வெறும் 17 லட்சம் தான். 27 தொகுதிகளில் நாம் 1,000 முதல் 2,000 வாக்குகள் என்ற மிகக் குறைந்த வித்தியாசத்திலேயே வெற்றியைத் தவறவிட்டிருக்கிறோம். தேர்தல் இன்னும் சில நாட்கள் முன்னதாக நடந்திருந்தால் வெற்றி வாய்ப்பு நமக்கே சாதகமாக இருந்திருக்கும். கடைசி மூன்று நாட்களில் வீசிய ஒரு மாற்றுக் காற்றினால் இந்தச் சிறிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

முன்பு தி.மு.க. அதிமுக என்றிருந்த போட்டி, இன்று ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சியான நமக்கும் இடையிலான போட்டியாக மாறியிருக்கிறது.

தமிழக வெற்றிக்கழகம் போன்ற புதிய வரவுகள் வாக்குகளைப் பிரித்துள்ளன. அ.தி. மு.க. கூட்டணியின் வாக்குகள் எங்கு திரும்பும் என்ற கணக்கும் உள்ளது. குறிப்பாக, சமூக வலைதளங்களை மிகத் தந்திரமாகப் பயன்படுத்தி, இளைய தலைமுறை மற்றும் குடும்பங்களிடம் அவர்கள் நேரடியாகச் சென்றடைந்து வாக்குகளைப் பெற்றுள்ளனர். நாம் அவர்களை ஒரு பொருட்டாகக் கருதாமல் இருந்த நேரத்தில் அவர்கள் இந்தத் தந்திரத்தால் முன்னேறியுள்ளனர். கழகத்தை மீண்டும் வலுப்படுத்த முத்தமிழறிஞர் கலைஞர் என்ற பெயரே மிகப் பெரிய ஆயுதம் உள்ளது. ஜூன் 3ஆம் தேதி கலைஞரின் 103 வது பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு கிளைக்கழகத்திலும் கழகக் கொடியேற்றி, பள்ளி மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும். கலைஞரின் புகழையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் மூலமே நாம் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்க முடியும்.

அமைச்சராக எனக்கு இருக்கும் பொறுப்பை விட, களத்தில் நிற்கும் ஒன்றியக் கழகச் செயலாளர்களுக்குப் பொறுப்பு அதிகம். கட்சி இக்கட்டான சூழலில் இருந்தபோது திருச்சி மாவட்டம் தான் எப்போதும் அரணாக நின்று வெற்றியைத் தேடித்தந்தது. அதேபோல், இப்போதும் மெத்தனமாக இருக்காமல் அசுர வேகத்தில் பணியாற்ற வேண்டும் என்றார்.

இந்த கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், அன்பில் பெரியசாமி மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





### தளபதி முருகேசன் தலைமை! ஞானசேகரன் வரவேற்புரை!

# கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழுக் கூட்டம்!

## திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி சிறப்புரை!

*கோவை, மே 30 -*

*கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் இன்று (30.05. 2026 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் சூலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.*

*கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகிக்கிறார்.*

*கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.*

*சீரபாளையம் செந்தில் குமார், கேபி சண்முகம், பிச்சனூர் அருள்ராஜ், வழக்கறிஞர் பஞ்சலிங்கம், வால்பாறை ரவிச்சந்திரன், ஆலாம்பாளையம் சிவசங்கரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*ஆலோசனைகள் வழங்கி திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி (கழக மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்) சிறப்புரையாற்றுகிறார்.*

*அதுபோது*

*1) ஜூன் 3 தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா.*

*2) ஆதிதிராவிடர் மற்றும் அருந்ததியர் பகுதியில் இயக்கத் தோழர்களை உறுப்பினர்களாக சேர்த்தல் தொடர்பாக.*

*எனவே மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழுவிற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

### தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# த.வெ.க. மகளிரணி நிர்வாகி ரீல்ஸ்!

*தேனி, மே 30 -*

*த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்து ஆய்வு என்ற பெயரில் த.வெ.க. நிர்வாகிகள் அரசு அலுவலகங்களுக்குச் சென்று ரீல்ஸ் எடுத்து பதிவிடுகின்றனர்.*

*அதன் தொடர்ச்சியாக தேனி மாவட்ட த.வெ.க. நிர்வாகி எனக்கூறி அஜிதா தெய்வேந்திரன் என்பவர் கட்சி நிர்வாகிகளை அழைத்துக் கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று, மாவட்ட ஆட்சியருக்கு பூங்கொத்து கொடுப்பது போலவும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கட்சி மகளிர் நிர்வாகிகளை மாவட்ட ஆட்சியருக்கு அறிமுகம் செய்து வைப்பது போலவும் ரீல்ஸ் எடுத்து வெளியிட்டுள்ளார்.*

*இந்நிலையில், த.வெ.க. தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பிரகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,*

*“தமிழக வெற்றிக் கழக தேனி வடக்கு மாவட்டத்தில் இருந்து மாவட்ட மகளிர் அணி என்று யாருக்கும் பொறுப்பு வழங்கப்படவில்லை.*

*மாவட்ட மகளிர் அணியினர் என்றும் நிர்வாகிகள் என்றும் கட்சியின் பெயரை பயன்படுத்தி எந்த அரசு அலுவலகங்களையோ அல்லது தனியார் நிறுவனங்களையோ அணுகக் கூடாது என கட்சியின் சார்பில் எச்சரிக்கப்படுகிறது.*

*விதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக கட்சியின் சார்பில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*த.வெ.க. எம்.எல்.ஏ.க்களையே கட்சி நிர்வாகிகளுக்கு தெரியவில்லை. அணிகளின் நிர்வாகிகள் யார், யார் என்பது அந்த கட்சி நிர்வாகிகளுக்கு எப்படி தெரியும் என நெட்டிசன்கள் கிண்டலடித்து வருகின்றனர்.*

### இனிவரும் எந்தத் தேர்தலிலும் போட்டியிட நிரந்தரத் தடை விதித்து - இடைத் தேர்தல்

# செலவையும் - ராஜினாமா செய்த 5 எம்.எல்.ஏ.க்களிடமே வசூலிக்கவும்!

## தேர்தல் ஆணையத்திடம் - சமூக ஆர்வலர் கே.ஆர்.குகேஷ் மனு!

*சென்னை, மே 30 -*

*தமிழ்நாட்டில் காலியாக உள்ள 5 சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான செலவை, ராஜினாமா செய்த எம்.எல். ஏ.க்களிடமே வசூலிக்க வலியுறுத்தி, தேர்தல் ஆணையத்திடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.*

*இதுதொடர்பாக சென்னை சூளைமேட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கே.ஆர்.குகேஷ் என்பவர் இந்திய தேர்தல் ஆணையத்திற்கும், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரிக்கும் மனு ஒன்றை அனுப்பியுள்ளார்.*

*அதில், நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் ஜோசப் விஜய் இரண்டு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதால், திருச்சி தொகுதியை ராஜினாமா செய்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*அவரைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களான பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்யபாமா, அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, மதுராந்கம் மரகதம் குமரவேல் ஆகிய 4 பேரும் தேர்தல் முடிந்த ஒரு மாதத்துக்குள்ளாகவே தங்களது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ததை குறிப்பிட்டுள்ளார்.*

*மக்களின் வரிப் பணத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே இந்த ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் மறந்து, அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்யும் வகையில் ராஜினாமா செய்த பொறுப்பற்ற செயலால் அரசுக்கு தேவையற்ற நிதி சுமையும் பொதுமக்களுக்கு காலவிரையமும் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.*


*இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிட்டு இந்த 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் செலவை, பதவியை ராஜினாமா செயத அந்த நபர்களிடமே முழுமையாக வசூலிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.*

*பொதுமக்களின் வரிப் பணம் வீணடிக்கப்படுவதை தடுக்க இதுவே சரியான வழிமுறை என்றும், கூறியுள்ளார்.*

*மேலும், ராஜினாமா செய்த ஐந்து நபர்களும் இனிவரும் காலங்களில் எந்த ஒரு தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் தகுதி நீக்கம் செய்து நிரந்தர தடை விதிக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர் குகேஷ் அனுப்பிய மனுவில் குறிப்பிட்டுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடகாடு த. நல்லதம்பி
### மே 30 (2014)



**தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.**

**அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.**

**1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வழக்கு விசாரணை முடிந்த 3 மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டும்!

## வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டது உச்ச நீதிமன்றம்!

*சென்னை, மே 30 -*

*உயர் நீதிமன்றங்கள் வழக்கு விசாரணை முடிந்த 3 மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டும் என வழிகாட்டி நெறிமுறை வழங்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*வழக்கு விசாரணைகள் முடிந்த பின்னரும் தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை தடுக்கும் வகையில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரிய காந்த் தலைமையிலான அமர்வு, அரசியல் சாசன பிரிவு 142 அடிப்படையில் தனி அதிகாரத்தை பயன்படுத்தி வழிகாட்டி நெறிமுறை வழங்கிஉத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.*

*அதன்படி, உயர் நீதிமன்றங்கள் வழக்கு விசாரணை முடிந்த 3 மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. ஜாமின் வழக்குகளில் விசாரணை முடிந்த மறுநாள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும், ஜாமின் உத்தரவுகளை உடனுக்குடன் சிறை அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை கைதிகள் உத்தரவு பிறப்பித்த அன்று அல்லது மறுநாள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தெரித்துள்ள உச்ச நீதிமன்றம், தீர்ப்பு விவரங்களை ஒரு வாரத்தில் இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பன உள்பட பல முக்கிய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.*

### இன்று முதல் 4 நாட்கள்

# இடுக்கி அணையைச் சுற்றிப்பார்க்க அனுமதி!

*திருவனந்தபுரம், மே 30 -*

*பண்டிகை நாட்களில் இடுக்கி மற்றும் செறுதோணி அணைகளை சுற்றிப்பார்க்க பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.*

*இந்நிலையில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு நேற்று முதல் வரும் 31ம் தேதி வரை 4 நாட்கள் இந்த அணைகளை சுற்றிப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த நாட்களில் காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அணைகளை சுற்றி பார்க்கலாம்.*

*தினமும் 3 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.*

*கட்டணம் குழந்தைகளுக்கு ரூ.25, பெரியவர்களுக்கு ரூ.50 ஆகும். கேமரா உள்பட எலக்ட்ரானிக் உபகரணங்களை கொண்டு செல்ல அனுமதி இல்லை.*

